# கல்வி, உயர் கல்வி மற்றும் தொழிற் கல்வி அமைச்சு
# வரையறுக்கப்பட்ட திறன் மேம்பாட்டு நிதியம்

SDFL
The Nation's Leader in Skills Development

## பதவி வெற்றிடங்கள்

**கல்வி அமைச்சின் கீழ் உள்ள வரையறுக்கப்பட்ட திறன் மேம்பாட்டு நிதியத்தில் பின்வரும் பதவி வெற்றிடங்கள் நிரப்புவதற்க்கு தகுதியுள்ள இலங்கை பிரஜைகளிடம் இருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.**

## 1. சேவை வகை : முகாமையாளர் (MM 1-1)

**புதவி : கணக்காளர் | பதவி வெற்றிடங்களின் எண்ணிக்கை: 01**

### அனைத்து விண்ணபதாரர்கள்

(அ) கல்வித் தகுதிகள்.

பல்கலைக்கழக மானிய ஆணையத்தால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகத்தில் வணிகம் அல்லது முகாமைத்துவ பட்டம் பெற்றிருக்க வேண்டும்.

அல்லது

இலங்கை பட்டயக் கணக்காளர்கள் நிறுவனத்தின் (ICASL) இடை நிலைத் தேர்வில் தேர்ச்சி பெற்றிருக்க வேண்டும்.

அல்லது

ஐக்கிய இராஜ்சியத்தின் பட்டய முகாமைத்தவ கணக்காளர்கள் நிறுவனத்தின் (CIMA) இடை நிலைத்தேர்வில் தேர்ச்சி பெற்றிருக்க வேண்டும் .

அல்லது

ஐக்கிய இராஜ்சியத்தின் பட்டயச் சான்றளிக்கப்பட்ட கணக்காளர்கள் சங்கத்தின் (ACCA) இடை நிலைத் தேர்வில் தேர்ச்சி பெற்றிருக்க வேண்டும் .

அல்லது

கணக்கியல் துறையில் உயர் தேசிய டிப்ளோமா (HNDA) தேர்ச்சி பெற்றிருக்க வேண்டும்.

பூர்த்தி செய்திருக்க வேண்டும்.

- (ஆ) வயது வரம்பு:
  22 வயதுக்குக் குறையாமலும் 45 வயதுக்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும். உள்ளக விண்ணப்பதாரர்களுக்கு அதிகபட்ச வயது வரம்பு பொருந்தாது.

### வெளி விண்ணப்பதாரர்கள

(அ). அனுபவம்

பட்டம் / தகுதிகளைப் பெற்ற பிறகு. அரசு நிறுவனம். சட்டப்பூர்வ வாரியம் அல்லது புகழ்பெற்ற தனியார் துறை நிறுவனத்தில் தொடர்புடைய துறையில் குறைந்தது மூன்று (03) ஆண்டுகள் அனுபவம்.

### உள்ளக விண்ணப்பதாரர்கள்.

(அ). அனுபவம்

பட்டம் / தகுதிகளைப் பெற்ற பிறகு. கனிஸ்ட முகாமையாளர் சேவைகள் பிரிவில் தொடர்புடைய துறையில் குறைந்தது மூன்று (03) ஆண்டுகள் திருப்திகரமான சேவைக் காலத்தைப் பூர்த்தி செய்திருக்க வேண்டும்.

அல்லது

பதவிக்கு ஒதுக்கப்பட்ட பாடப்பிரிவுடன் தொடர்புடைய. கனிஸ்ட முகாமையாளர் சேவைப் பிரிவு. தரம் II இல் ஐந்து (05) ஆண்டுகள் திருப்திகரமான சேவையைப் பூர்த்தி செய்திருக்க வேண்டும்.

- சம்பளக் குறியீடு மற்றும் சம்பள அளவு கோல்:

**MM 1-1-2025-Rs 91,690-10X2,480-15X3,450-168,240**

(சம்பளம் வழங்கப்படுவது முகாமைத்துவ சேவை சுற்றறிக்கை 01/2025 உப பதிவேடு II க்கு அமைய என்பதை கருத்தில் கொள்க.)

## சேவை வகை : கனிஸ்ட முகாமையாளர் (JM 1-1)

**புதவி : நிர்வாக அதிகாரி | பதவி வெற்றிடங்களின் எண்ணிக்கை: 01**

### அனைத்து விண்ணபதாரர்கள்

பல்கலைக்கழக மானிய ஆணையத்தால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகத்தில் ஏதேனும் ஒரு பாடப் பிரிவில் பட்டம் பெற்றிருக்க வேண்டும். மேலும் பட்டப்படிப்புக்குப் பிறகு அரசுத் துறை / நிறுவனத்தில் / சபை அல்லது அங்கீகரிக்கப்பட்ட வணிக நிறுவனத்தில் தொடர்புடைய துறையில் குறைந்தது ஒரு வருட அனுபவம் பெற்றிருக்க வேண்டும்.

### உள்ளக விண்ணப்பதாரர்கள்.

பல்கலைக்கழக மானிய ஆணையத்தால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகத்தில் ஏதேனும் ஒரு பாடப் பிரிவில் பட்டம் பெற்றிருக்க வேண்டும். மேலும் பட்டப்படிப்புக்குப் பிறகு சம்பந்தப்பட்ட துறையில் "முகாமைத்துவ உதவியாளர்" (தொழில்நுட்பம் சாராத) பிரிவில் குறைந்தது ஒரு (01) வருட திருப்திகரமான சேவையைப் பெற்றிருக்க வேண்டும்.

அல்லது

"முகாமைத்துவ உதவியாளர்" (தொழில்நுட்பம் சாராத) தரம் II பதவியில் தொடர்புடைய துறையில் ஐந்து (05) ஆண்டுகள் திருப்திகரமான சேவையை முடித்திருக்க வேண்டும்.

- வயது வரம்பு:
  22 வயதுக்குக் குறையாமலும் 45 வயதுக்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும். உள்ளக விண்ணப்பதாரர்களுக்கு அதிகபட்ச வயது வரம்பு பொருந்தாது.
- சம்பளக் குறியீடு மற்றும் சம்பள அளவு கோல்:

**JM 1-1-2025-Rs 72,650-10X1,360-18X2,040-122,970**

(சம்பளம் வழங்கப்படுவது முகாமைத்துவ சேவை சுற்றறிக்கை 01/2025 உப பதிவேடு II க்கு அமைய என்பதை கருத்தில் கொள்க.)

---

**மற்றவை:**
**ஒவ்வொரு விண்ணப்பதாரரும்:**

I. இலங்கையின் பிரஜையாக இருத்தல் வேண்டும்.
II. பதவிக்கு ஒதுக்கப்பட்ட கடமைகளைச் செய்வதற்கும் நாட்டின் எந்தப் பகுதியிலும் பணியாற்றுவதற்கும் உடல் ரீதியாகவும் மன ரீதியாகவும் தகுதியுடையவராக இருக்க வேண்டும்.
III. சிறந்த குணாதிசயங்களைக் கொண்டிருக்க வேண்டும்.
IV. இந்தப் பதவி ஒரு நிரந்தரப் பதவியாகும். மேலும் ஊழியர் சேமலாப நிதியம் மற்றும் ஊழியர் நம்பிக்கை நிதியத்திற்கு உரித்து உண்டு.
V. மேற்கண்ட சம்பளங்களுக்கு கூடுதலாக. அரசாங்கத்தால் அங்கீகரிக்கப்பட்ட வாழ்க்கைச் செலவுக் கொடுப்பனவு மற்றும் சிறப்பு கொடுப்பனவுகளை அரசாங்கம் செலுத்தும்.
VI. பொது அரச சேவை / நிறுவனங்கள் / சட்ட ரீதியான வாரியங்களில் பணி புரியும் விண்ணப்பதாரர்கள் தங்கள் விண்ணப்பங்களை சம்பந்தப்பட்ட நிறுவனத்தின் தலைவர் மூலம் மட்டுமே சமர்ப்பித்தல் வேண்டும்.
VII. நியமன வழங்குதல் மற்றும் நேர்முக தேர்வுகள் நடாத்தல் என்பன நியமனம் வழங்கும் அதிகாரியால் எடுக்கப்பட்ட இறுதி முடிவுகளின் படியே மேற்கொள்ளப்படும்.

முழுமையாக பூர்த்தி செய்யப்பட்ட சுய விபர கோவை. பிறப்புச் சான்றிதழின் நகல்கள். ஏனைய உரிய கல்வி மற்றும் தொழில் முறை தகுதிச் சான்றிதழ்கள். சேவைச் சான்றிதழ்கள் மற்றும் உறவினர் அல்லாத இரண்டு பரிந்துரையாளர்களின் பெயர்கள் மற்றும் முகவரிகளுடன் தயாரிக்கப்பட்ட விண்ணப்பப் படிவம் பதிவுத் தபாலில் 2025 ஆகஸ்ட் 10 ஆம் திகதிக்கு முன் கீழே கொடுக்கப்பட்டுள்ள முகவரிக்கு அனுப்பப்பட வேண்டும். பதிவுத் தபாலில் தொலைந்து போகும் அல்லது தாமதமாகப் பெறப்படும் விண்ணப்பங்களுக்கு வரையறுக்கப்பட்ட திறன் மேம்பாட்டு நிதியம் பொறுப்பேற்காது. விண்ணப்பங்களை ஒப்படைக்கும் இறுதித் திகதிக்குப் பிறகு வரையறுக்கப்பட்ட திறன் மேம்பாட்டு நிதிய நிறுவனத்திற்கு கிடைக்கும் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும். விண்ணப்பிக்கும் பதவியை உரிய விண்ணப்ப உறையின் இடது பக்க மேல் மூலையில் குறிப்பிட வேண்டும்.

தலைவர்.
வரையறுக்கப்பட்ட திறன் மேம்பாட்டு நிதி.
'நிபுணத பியச", 7
வது மாடி, எண். 354/2,
எல்விடிகல மாவத்தை, கொழும்பு 05.

தொலைபேசி எண்: 011 250 7274